A+

**eduresourceza.com**

Downloaded from eduresourceza.com

NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2021

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 9 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your interest to write legibly and to present your work neatly.

---

Downloaded from eduresourceza.com

IEB Copyright © 2021

Downloaded from eduresourceza.com


## SECTION A

## QUESTION 1

### பகுதி ஒன்று

**கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக**

*<u>சொக்கன் செட்டியாரும் சுக்கான் செட்டியாரும்</u>*

சென்னையில் சொக்கன் செட்டியார் என்ற பெயருள்ள ஒரு செட்டியார் இருந்தார். அவர் தமது குலவழக்கப்படி வாணிகம் செய்யத் தொடங்கினார். அவருடைய வாணிகம் வேட்டி, வாங்கிய விலைக்குமேல் ஒரு ரூபாவுக்கு வீசம் ரூபா ஊதியம் வைத்து விற்றார். செட்டியார் கடையின் விலை மற்றைக் கடைகளின் விலையைப் பார்க்கிலும் மிகக் குறைவாக இருந்தது.

ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாமல் வாணிகம் நடைபெற்றது. செட்டியார் கடைவிலை மற்றைக் கடைகளின் விலைக்கு மிகக் குறைவாக இருந்தபடியால், கூட்டம் மிகுதிப்பட்டு வாணிகம் நன்கு நடைபெற்றது. அதனால் செட்டியார் மிக விரைவில் பணக்காரர் ஆனார். அந்தச் செட்டியாருக்கு உடன் பிறந்தவர் ஒருவர் இருந்தார்.

அவர் சொக்கன் செட்டியாருக்கு மூத்தவர். தம்முடைய தம்பி விரைந்து செல்வனாதலைக் கண்டு பொறாமைப்பட்டார். தாமும் தம் இளவனைப் போல் வாணிகம் செய்து விரைந்து செல்வனாக எண்ணினார். தாமும் துணி வாணிகமே செய்யத் தொடங்கினார். தாம் ருபாவுக்கு அரை ரூபா ஊதியம் வைத்து விற்றால், தம் தம்பியைப் பார்க்கினும் விரைவில் செல்வத்தைப் பெருக்கி விடலாம் என்று முடிவு செய்து அவ்வாறே செய்தார். எவரேனும் தம் கடைக்கு வந்துவிட்டால், அவர்களிடமுள்ள காசைப் பற்றிக் கொண்டு மட்டமான துணிகளைக் கொடுத்து ஏமாற்றத் தொடங்கினார். இவருடை பெயர் சுந்தரம் செட்டியார். இப்பெயர் மிகுவிரைவில் சுக்கான் செட்டியார் என்று மாறிவிட்டது. ஒருமுறை சென்றவர்கள் மறுமுறை செல்வதே இல்லை.

மிகு விரைவாகச் செட்டியாருடைய வாணிகம் விழுந்துவிட்டது. முதலில் வாங்கிய துணிகளே விற்பனையாகாமல் மக்கிக் கெட்டுப்

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2021

Downloaded from eduresourceza.com


போயின. அதனால் அவர் வறிஞரும் ஆகிச் சுக்கான் கெட்டியார் என்னும் இழிவு சிறப்புப் பெயரையும் பெற்றார். ஆகையால் வாணிகம் செய்வோர் தகுதியான முறையில் நடந்து கொள்வதே ஒழுங்காகும்.

[நடுவு நிலைமை, செய்]

[ஆசிரியர்: திரு க. இனியன்]

1.1 காலி இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக

1.1.1 அவர் தமது _______________ வாணிகம் செய்யத் தொடங்கினார் (1)

1.1.2 _______________ செட்டியார் மிக விரைவில் பணக்காரர் ஆனார் (1)

1.1.3 தம்முடைய தம்பி விரைந்து செல்வனாதலைக் கண்டு _______________ (1)

1.1.4 அவருடை பெயர் _______________ செட்டியார் (1)

1.1.5 _______________ சென்றவர்கள் மறுமுறை செல்வதே இல்லை (1)

1.2 கீழ்வரும் கேள்விகளுக்கு விடை தருக.

1.2.1 சொக்கன் செட்டியார் எந்த ஊரில் இருந்தார்? (2)

1.2.2 சொக்கன் செட்டியார் என்ன விற்றார்? (2)

1.2.3 ஒரு நாளைக்கு இவர் வாணிகம் எப்படி நடைபெற்றது? (2)

1.2.4 மூத்தவர் என்ன எண்ணினார்? (2)

1.2.5 இவர் பெயர் என்ன? (2)

1.2.6 எவை மக்கிக் கெட்டுப் போயின? (2)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com


1.3 எது சரி எது தவறு எனக் கூறுக.

1.3.1 சொக்கன் செட்டியார் சென்னையில் இருந்தார். (1)

1.3.2 சொக்கன் செட்டியார் பூ வாணிகம் நடத்தி வந்தார் (1)

1.3.3 சுக்கான் செட்டியாருடை கடைக்கு ஒருமுறை சென்றவர்கள் மறுமுறை சென்றுகொண்டே வந்தார்கள் (1)

1.3.4 முதலில் வாங்கிய துணிகள் மக்கிக் கெட்டுப் போயின (1)

1.3.5 சொக்கன் செட்டியார் மட்டமான துணிகளைக் கொடுத்து ஏமாற்றத் தொடங்கினார் (1)

1.4 எதிர்ச்சொல் தருக எ.கா. அந்த - இந்த

1.4.1 ஒருமுறை (1)

1.4.2 நல்லது (1)

1.4.3 முதல் (1)

1.4.4 முடியும் (1)

1.5 ஒருமைக்குப் பன்மை எழுதுக எ.கா. பந்து - பந்துகள்

1.5.1 கடை (1)

1.5.2 துணி (1)

1.5.3 ஏனம் (1)

1.5.4 நீ (1)

1.5.5 நாள் (1)

1.5.6 மனிதன் (1)

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2021

Downloaded from eduresourceza.com


1.6 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக

**எனக்கு இப்பவும் நினைவில் இருக்கிறது, என் அம்மா எனக்குச் சொன்ன அந்தக் கதை.**

**ஒரு வயதான பெண்மணி தீவிரமான கண் நோயால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள். அவ்வழியே சென்ற ஒரு வழிப்போக்கனை அழைத்து, தன் கண்களைத் துடைத்து மருந்து போடுமாறு கேட்டாள். ஆனால் அந்த மனிதன் அவளைப் பார்க்காதது போலச் சென்று விட்டான். சற்று நேரத்தில் மற்றும் ஒரு மனிதன் அவ்வழியே செல்வதை அறிந்த அந்தப் பெண்மணி தனக்கு உதவுமாறு வேண்டினாள். அம்மனிதன் அந்தப் பெண்ணின் நிலையை அறிந்து அவளின் கண்களைத் துடைத்து மருந்திட்டான். என்ன மாயமோ தெரியவில்லை. அந்தப் பெண்ணின் கண்நோய் குணமானது. அப்பெண் இளமையாகவும் மிகுந்த அழகாகவும் மாறிவிட்டாள். அம்மனிதன் அப்பெண்ணையே திருமணம் செய்து கொண்டான். அதன் பிறகு அவன் பெரிய செல்வந்தனாக ஆனான். மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.**

1.6.1 பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? (1)

1.6.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு (4) பெயர்ச்சொற்களை எழுதுக (4)

1.6.3 இரண்டு (2) சுட்டு எழுத்துக்கள் எழுதுக (2)

1.6.4 இரண்டு (2) வினா எழுத்துக்கள் எழுதுக (2)

1.6.5 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்களை எழுதுக (2)

1.7 ஆண்பாலுக்குப் பெண்பால் எழுதுக எ.கா. மகன் - மகள்

1.7.1 ஆண் (1)

1.7.2 செல்வன் (1)

1.7.3 அழகன் (1)

1.7.4 வீட்டுக்காரன் (1)

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2021 

Downloaded from eduresourceza.com


1.8 சேர்த்து எழுதுக எ.கா. அதை + பார் = அதைப்பார்

1.8.1 வழி + போக்கன் (1)

1.8.2 அவளை + பார்த்தாள் (1)

1.8.3 இப்படி + போ (1)

1.8.4 இந்த + குழந்தை (1)

1.8.5 எனக்கு + கொடு (1)

1.9 சரியாக எழுதுக எ.கா. வீடு - வீட்டுக்கு

1.9.1 அவர் சிங்கம் பிடித்தார் (1)

1.9.2 அப்பா கடை சென்றார் (1)

1.10 பிரித்து எழுதுக எ.கா. பச்சைக்குடம் - பச்சை + குடம்

1.10.1 பலாப்பழம் (1)

1.10.2 பணப்பை (1)

1.10.3 பள்ளிக்கூடம் (1)

1.10.4 எனக்குக் கொடு (1)

1.11 அகர வரிசையில் எழுதுக

உடல் ஒன்று அம்மி இவை என்ன (2)

**60 marks**

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2021

Downloaded from eduresourceza.com


**SECTION B**

**QUESTION 2**

**பகுதி இரண்டு**

கொன்றை வேந்தன்

2.1 சரியான சொற்களால் முடிவு செய்க

2.1.1 அன்னையும் பிதாவும் __________ (2)

2.1.2 _____________ தீயார் கொள்வர் (2)

2.1.3 எண்ணும் எழுத்தும் ____________ (2)

2.1.4 _____________ ஓரகத்து இரு (2)

[ஈயார் தேட்டைத், கண் எனத் தகும், ஒருவனைப் பற்றி, முன்னறி தெய்வம்]

2.2 **கொடுக்கப்பட்ட கொன்றை வேந்தன் விளக்கக் கதைகளிருந்து ஏதேனும் ஒரு கதையை முடிவு செய்க.** (COMPLETE ANY 1 STORY)

2.2.1 **ஒரு நரி நடந்து வந்தது –**

**அல்லது** (OR)

2.2.2 **ஓர் ஊரில் பச்சையப்பன் –** (6)

2.3 **திருக்குறள்**

**பெருங்கடல் பகுதிகளைப் பயன்படுத்திக் கீழ்வரும் குறள்களை நிறைவுசெய்க**

2.3.1 **அகர முதல எழுத்தெல்லாம்** _________________ (2)

2.3.2 **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்** _________________________ (2)

2.3.3 ____________ **வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்** (2)

2.3.4 ____________ **நீந்தார் இறைவன் அடிசேரா தார்** (2)

2.3.5 **கற்க கசடறக் கற்பவை கற்றபின்** _________________ (2)

**[பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு, கற்றதனால் ஆய பயனென்கொல், ஆதி பகவன் முதற்றே உலகு, நிற்க அதற்குத் தக, பிறவிப் பெங்கடல் நீந்துவர்]**

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com


2.4 வாழ்க்கை வரலாறு

2.4.1 ஔவையாரைப் பற்றி சுமார் 4–5 வரிகளை எழுதுக

அல்லது (OR)

2.4.2 திருவள்ளுவரைப் பற்றி சுமார் 4–5 வரிகளை எழுதுக. (4)

**[28]**

eduresourceza.com

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2021

Downloaded from eduresourceza.com


**QUESTION 3**

## பகுதி மூன்று

**கவிதை: பாப்பாப் பாட்டு**

**இப்பகுதியைப் படித்துக், கேள்விகளுக்குச் சரியான விடை தருக:**

கொத்தித் திரியும் அந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா
பாலைப் பொழிந்துதரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரு நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா
வண்டி இழுக்கும் நல்லகுதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா

**கேள்விகள்**

3.1 பாப்பா பாட்டை எழுதியவர் யார்? (1)

3.2 கோழி எப்படித் திரியும்? (2)

3.3 பாட்டிலிருந்து இரண்டு பறவைகளின் பெயர்களை எழுதுக (2)

3.4 பாப்பா மற்ற பிள்ளைகளோடு எப்படி வினையாட வேண்டும் (2)

3.5 பாட்டிலிருந்து இரண்டு விலங்குகளின் பெயர்களை எழுதுக (2)

3.6 பசு ஏன் மிக நல்லது? (1)

3.7 பாப்பாவிடம் எந்தெந்த தீமைகள் இருக்க கூடாது? (2)

**[12]**

**40 marks**

**Total: 100 marks**

Downloaded from eduresourceza.com
IEB Copyright © 2021